இன்று – மாதமிருமுறை மின்னிதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்... விற்பனைக்கல்ல

2026 May 1-15

வருடம் 2 இதழ் 33

சமூகிய ஆரம்பம்

இன்று

இன்று என்றும் நன்று

ஈ இதழ்



திருச்சிற்றம்பலம் சுரேஷ் சிறப்பிதழ்



எனது
மதிப்பிற்குரிய
பெற்றோர்





அனைவருக்கும் வணக்கம்.

டயலாக் சிறப்பிதழில் டயலாக் குறைவாக இருந்தாலும் அனைத்து படைப்புகளையும் வெளியிட்டது சிறப்பாக அமைந்தது.

இந்த இதழ் திரு.சுரேஷ் திருச்சிற்றம்பலம் அவர்களின் சீரிய தயாரிப்பில் வெளியாகி உள்ளது. நல்ல உழைப்பாளி, வித்தியாசமான சிந்தனையாளர். சமூக வலை தளங்களில் தனக்கென்று ஒரு முத்திரை பதிப்பவர். நமது இன்று ஈ இதழில் தொடர்ந்து எழுதி வருபவர். தன் பெற்றோர் பாசங்களை அழகாக வெளிப்படுத்தியுள்ளார். இனி அவரின் பக்கங்களை ரசித்து படியுங்கள்.

மாதத்தின் இரண்டாம் பாதி இதழ் ஏதாவது ஒரு சிறப்பதழாக வெளியாவது போல் அடுத்த இதழ் ஹை... கூ... கவிதை சிறப்பிதழாக வெளியாகும். படைப்பாளர்கள் அதுபோன்ற படைப்புகளை அனுப்புங்கள்.


அடுத்த மாதம் வரும் ஜீன் 1–15 இதழ் நமது இன்று ஈ இதழின் புதுக்கவிதை மன்னர் திரு.லி.நௌசாத் கான் தயாரிக்கிறார். அவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்த இதழில் மேலும் சில புதுமைகள் புகுத்தியுள்ளோம். படியுங்கள் ரசியுங்கள்...
இன்று ... தொடர்ந்து வாசியுங்கள்...

நேசமுடன்

வெ.கோபிநாத், ஆசிரியர்
சுரேஷ் திருச்சிற்றம்பலம்,
சிறப்பாசிரியர்

இன்று மின்னிதழ்





அனைவருக்கும் இனிய உழைப்பாளர் தின வாழ்த்துக்கள்...

அந்த கட்சி என்ன ஏமாத்திருச்சி?



என்னாச்சி?

ஓட்டு போட்டா ஒரு செண்ட் தருவதா சொன்னாங்க... இப்ப என்னடான்ன வாசனை திரவியம் செண்ட் தர்றாங்க...

ம.ராகவன்,





விடை கடைசிபக்கம்.





குடியரசுத் தலைவர் விருது பெற்ற முதல் தமிழ்த் திரைப்படம் ?

விடை– கடைசி பக்கம்

2026 ஜீன் 1–15
இன்று ஈ இதழ் சிறப்பாசிரியர்

லி.நௌஷாத் கான்









முத்து ஆனந்த்

வேலூர்

மொபைலிலிருந்து
நிமிர்கிறாள்
என்னைப் பார்க்க!

கேட்காமலே
முத்தம் கிடைக்கும்
காதலில்!

கனவுகள்
கற்பனைகளால்
நிரப்பப்பட்டது காதல்!

காதலுக்கு
அழகு சேர்ப்பது
கவிதைகள் தான்!

காதலில்
கண்களே
கவிதைகள்!

எல்லாமே
அழகு தான்
காதலிக்கும் போது!

எப்படியாவது
கவிதையில் நுழைந்து
விடுவதே
காதலுக்குப் பழக்கம்!

அதரப் பழக்கத்தில்
தொடங்குகிறது
இதர ஆசைகள்!



வட்டம்

என்னைச் சுற்றி
ஒரு வட்டமிட்டுக்
கொண்டேன்!
அந்த வட்டத்திற்குள்
உன்னையும்
என்னையும்
தவிர
வேறு எவருமில்லை!
ஏனெனில்
இது தான்
கா த ல்
என் பேரன்பே!





லி.நௌஷாத் கான்

நீ அப்பாவி போல
தலையில் பூ வைத்தாய்
ஏனோ
நான் பாவியாகி போனேன்!

உன் ஏக்கங்களில்
ஏங்கி தான் போகிறது
என் மனசு!

சிரித்து தொலைக்காதே
செதுக்கி விட போகிறேன்
பல கவிதை சிற்பங்களை!

தீண்டாமை பெருங்குற்றமாம்
மரியாதையாக
பார்வைகளாவது
என்னை தீண்டி விட்டுப் போ!

கல்லூரிக்குள் வந்தாய்
காணாமல் போனது
என் இதயம்!


முதலில்
உன்னை படித்து தான்
மேதையாக வேண்டும்!

மினி கீதை



மூட நம்பிக்கை – மலர்மதி

"பாம்பு கடித்தவுடன் டாக்டர்கிட்ட போகாம இப்படி மந்திரவாதிகிட்டத் தூக்கிட்டுப் போய் அநியாயமா ஓர் உயிரை இழந்துட்டீங்களே, இன்னும் எப்ப உங்களுக்கு அறிவு வரும்?" என கிராமவாசிகள் மீது எரிந்து விழுந்த டாக்டர் தீனதயாளன், மாலையில் வீடு திரும்பும்போது மறக்காமல் ஜோதிடரிடம் சென்று, "சுவாமி, என் மகள் இந்த வருடம் நீட் தேர்வு எழுதப்போறாள். அவள் தேறுவாளான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்க!" என்று அவள் ஜாதகத்தைக் கொடுத்தார்!!!



திருச்சிற்றம்பலம் சுரேஷ் என்னும் நான்...



பெயர்... சுரேஷ்
பெற்றோர்.. தந்தை–சிவானந்தம்{அமரர்}
தாயார்–மங்களம்
படிப்பு... 10வது
உடன் பிறப்பு... இல்லை
திருமணம் ஆகவில்லை.

திருச்சிற்றம்பலம் முரளிதரன், திருச்சிற்றம்பலம் அபர்ணா.. ஆகிய பெயரில்1991ல் முதல் எழுத ஆரம்பித்தேன். பின் திருச்சிற்றம்பலம் சுரேஷ்&திருச்சிற்றம்பலம் மங்களம் பெயரில் எழுதினேன்.

2000 ஆண்டில் கடலூர் மாவட்டம் வந்தோம்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்
நெல்லிக்குப்பம்சுரேஷ்
திருக்கண்டேஸ்வரம்சுரேஷ்
திருக்கண்டேஸ்வரம் மங்களம்...
ஆகிய பெயரில்.. எழுதி வருகிறேன்.

பணி... மருத்துவமனையில் கிளர்க்காக பணி புரிகிறேன் 19வருடங்களாக... நெல்லிக்குப்பத்தில்

1991 முதல் பத்திரிக்கைக்கு எழுத ஆரம்பித்த நான். இன்று வரை வெளிவந்த அத்தனை படைப்பையும் ஆல்பமாக ஒட்டி வருகிறேன்.

மே1997 ஓ! மாத இதழ் வாசகர்களுக்கு..
கேள்வி.. பதில் கூறி இருக்கிறேன். அதே போல் நாம் இதழ் வாசகர்களுக்கு கேள்வி & பதில் கூறி இருக்கிறேன். அதே இதழ்க்கு மே 1997 இதழுக்கு சிறப்பாசிரியாராக இருந்து படைப்பு தந்துள்ளேன்.

கூட்டு கவிதை தொகுப்பில் இணைந்து 40க்கு மேல் இடம்பெற்றுள்ளேன்2026வரை.

கல்கண்டு 31.5.2000 இதழில் என் கவிதையை நடிகர் சார்லி தேர்வு செய்தது சிறப்பாக இருந்தது.

சென்னை "கதைச்சோலை" மாத இதழில் தொடந்து படைப்பு எழதிய காரணத்துக்காக நடிகர் நாகேஷ் மூலமாக 06.8.2000 அன்று விருது பெற்றேன். இதுதான் நான் பெற்ற முதல் விருது.

மாத நாட்களின் சிறப்பு தினம் & பிரபல இந்தியர்களின் பிறந்தநாள், ஆண்டு தொகுப்பு பக்கத்தை "சென்னை வாசகர் வட்டம்" மாத இதழ்

2000 வருடத்தில் வெளியிட்டு ஊக்கம் தந்தது.

புதுச்சேரி–யில் இருந்து வெளிவந்த தினகரன் "புகைப்பட கவிதை" பக்கத்தில். 2003 முதல் 2005 வரை நிறைய கவிதை வெளிவந்தது.

12.1.2004 குமுதம் வார இதழ் நடிகர்களை சந்திக்க வைத்து பேட்டி எடுத்த நிகழ்வில் நானும் தேர்வாகி நடிகர் ரோஜா கூட்டம் நாயகன் ஸ்ரீகாந்த் அவர்களை பேட்டி எடுத்தேன்.

மித்ரா துளிப்பா விருதை. 2015–ல் பெற்றேன்.

வீரவாகை மின் இதழில் ஒரு வருடம் மேல் என்னுடைய ஹைக்கூ கவிதை வெளிவந்தது.

திருநெல்வேலி உங்கள் நண்பன் இதழ் மூலமாக இரு முறை ஹைக்கூ விருது பெற்றேன்.

சென்னை ஆத்திமாலை வார இதழின் வாரம் ஒரு வாசகர் பகுதியில் ஒரு முறை இடம் பெற்றேன்

பொதிகை மின்னல் இதழில் 15வருடங்களுக்கு மேலாக படைப்பு எழதி வருகிறேன்.

தமிழத்தில் வெளிவந்த பெரும்பாலான. இதழில் ஒரு முறையாவது இடம்பெற்று இருப்பேன்.

சில, பல காரணத்தால் அதிகமாக படைப்புகள் எழுதுவதில்லை. அதற்கு முக்கிய காரணம் என் திருமணம் தொடர்பானது.

எனக்கு ஒரே ஆறுதல் என் தாய் மட்டுமே.

இப்பொழுதும் அதிகமாக எழுத ஆசை. முடியவில்லை.

பேஸ்புக்... கவிதை தளத்தில் இணைந்து விருதுகளும்1000மேல் சான்றிதழ்களும் பெற்றுள்ளேன்.

இன்று அதிகமாக எழுதுவது தமிழ்நாடு இ பேப்பர் மற்றும் இன்று இ இதழ்...

ஜெராக்ஸ் வடிவில் –6 நூல் வெளியிட்டு உள்ளேன்.


ஓ! மாத இதழில் அமரர் ஜெயா நினைவு கவிதை போட்டிக்காக ஒரு வருடத்திற்கு கவிதை போட்டி வைத்தேன்.

புதுச்சேரி வானொலி–யில் வாசகர் கடிதம் மூலமாக பிரபலம் அடைந்தேன். 1992–ம் ஆண்டு துலா கோல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன்.

இதுவரை பத்திரிகை வாயிலாக 500–க்கு மேல் கேள்விக்கு பதில் பெற்றுள்ளேன். நிறைய முறை பரிசு பெற்றுள்ளேன்.

என் தாய் எனக்கு பொக்கிஷம்

இன்று மின்னிதழ்



இறைவனை மனித உருவில் பார்த்து பேசுவது என்றால் அதற்கு பெயர் பெற்றோர்.

சிலர் இவர்களை மிகவும் கேவலமா நடத்துவது மனதிற்கு மிக வருத்தமாக உள்ளது.

எனக்கு கிடைத்த பொக்கிஷம் என் பெற்றோர்.

தந்தை இறந்து 14 ஆண்டுகள் கடந்து விட்டது. என் தாய் இரு பொறுப்பில் இருந்தும் சிறப்பாக கவனித்து வருகிறார்கள்.

என் தாய் என் எழுத்துப்பணிக்கு மிகவும் உதவியாக இருக்கிறார்கள். என் படைப்பை படிப்பது இல்லை. விருதை கண்டு மகிழ்ச்சி பெறுவார்கள்.



1985, 2021 ஆகிய இரு முறை எனக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. 1985 அப்பா இருந்தார். 2021 விபத்தின் பொழுது அம்மா மட்டும் இருந்தார்கள்.

மூன்று மாதம் அவர்கள் எனக்காக.. கஷ்டப்பட்டது ரொம்ப வருத்தமாக உள்ளது. அதே ஆப்ரேசன் செய்த பிளேட் எடுக்க மறுபடியும் அதே காலில் ஆப்ரேசன் செய்து பிளேட் எடுக்கப்பட்டது என் அம்மா. ஒரு மாதம் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.. அத்தனை வேலையும் தன்னுடைய 70 வயதிலும் செய்தார்கள்.

எனக்கு உடன் பிறப்பு இல்லை. அப்பா இல்லை. மனைவி இல்லை.

அம்மா மட்டுமே. 14 வருடமாக நான் இரவு வீட்டுக்கு வரும் வரை தனியாக இருப்பார்கள்.

விழா நிகழ்வுக்காக பல நாட்கள் வீட்டில் இருக்க மாட்டேன். அப்பொழுதும் அவர்கள் தனியாகத்தான் இருப்பார்கள்.

அப்பா மறைவுக்கு பின் சொந்த வீடு கட்டினேன். அதற்கு அவர்களுடைய தம்பிகள் பெரிதும் உதவினார்கள்.

அவர்கள் மறைவுக்கு முன் எனக்கு திருமணம் ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். எனக்கும் அந்த ஆசை உண்டு.

என் தாய்.,. எனக்கு கிடைத்த பொக்கிஷம்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்

அம்மா

கருவறையில் இடம் தந்து
பிள்ளையாய் பெற்றெடுத்து

வாரிசாய் கருதி
முதல் உணவு தந்தவளே..!

பசித்தாலும்..
அழுதாலும்..
அடம்பிடித்தாலும்..
சிரித்த முகத்துடன்..
உணவு கொடுப்பவளே...!

சாப்பிட மறுத்தாலும்..
படிக்க மறுத்தாலும்..
பேச மறுத்தாலும்..
கடிந்து கொள்ளாதவளே..!

எந்த நேரத்திலும்..
யார் வந்தாலும்..
அமுதுப்படைத்து
முகம் மலர..
வழி அனுப்புபவளே..!

இல்லற வாழ்க்கையில்
இன்பம் ஏற்பட்டாலும்..
துன்பம் ஏற்பட்டாலும்..
முகம் மலர..
வாழ்க்கை நடத்துபவளே..!

வரவுக்கு மீறி
செலவு செய்யாமல் சிக்கனமாய் வரம்புக்குள்
குடும்பம் நடத்துபவளே..!

பள்ளி விட்டு வந்தவுடன்
நெறுக்கத்தீணி
தந்துவிட்டு
இன்னொரு ஆசிரியராய்
பாடம் கற்றுத் தருபவளே..!

உலகத்தை காட்டியவளே..
வாழ்க்கையை..தந்தவளே
ஆசிரியராய்..வீட்டில்
கல்வி கற்றுத் தந்தவளே..!

நீர்தான்
இன்னொரு கடவுள்
எல்லாப் பிள்ளைக்கும் அம்மாவாய்.



திருச்சிற்றம்பலம் சுரேஷ்

தமிழக எழுத்தாளர் குழுமம் {கட்டுரை}



என் எழுத்தே... எனக்கு முதல் நண்பன்.

1990 வருடங்களில்... திருச்சிற்றம்பலம் கிராமத்தில் வாடகை வீட்டில் வசித்த பொழுது அந்த வீட்டு குடும்ப தலைவர் வார இதழ்களை படிக்கும் பழக்கம் கொண்டிருந்தார். நானும் இதழ்களை படிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது என் மனதில் தோன்றியது. நாமும் எழுத வேண்டும் என்று.

என்னுடைய முதல் பத்திரிகை படைப்பு தினத்தந்தி வாசகர் கடிதம். அதிலும் புனை பெயரில்... {1991 திருச்சிற்றம்பலம் முரளிதரன் }

அதிக அளவில் வாசகர் கடிதம், புகார் கடிதம் {புதுச்சேரி மாலைமலர்}, கொஞ்சம் கவிதை, கொஞ்சம் சிரிப்பு எழுதிக்கொண்டு இருந்த என்னை.. மேலும்.. மேலும்.. அதிக அளவில் எழுத தூண்டியது... தமிழக எழுத்தாளர் குழுமம்.

என்னை,.. அறிமுகப்படுத்திய நண்பர் பெயர் நினைவு இல்லை.

1998 முதல் எழுத்துப் பயணம் செய்து வருகிறேன். இந்த குழுவில் பயணம் செய்த நண்பர்கள் தங்களுடைய படைப்பை பதிவு செய்யும் பொழுது நாமும் நம் படைப்பு தரத்தை உயர்த்த வேண்டும் என்று கருதினேன்.

தமிழக எழுத்தாளர் குழுமம் நடத்திய நாகப்பட்டினம் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்முறையாக கலந்து கொண்டேன்.

நிறைய நண்பர்கள் அறிமுகம் கிடைத்தது. அறிவுரையும் கூறினார்கள். அவை பொக்கிஷமாக பொற்றுக்கொண்டேன்

தொடர்ந்து அவர்களுடைய சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வருகிறேன்.

பெரும்பாலும் அதிகம் பேசமாட்டேன். ஆனால் தமிழக எழுத்தாளர் குழுவில் பதியப்படும் படைப்பை படிக்காமல் இருக்கமாட்டேன்..

2021-ம் ஆண்டில் எனக்கு காலில் அடிப்பட்டது. என்னால் போக முடியாத நிலையிலும் என் தாயை தனியாக அனுப்பி வைத்தேன். என் சார்பாக {திருவண்ணாமலை சந்திப்பு}. அவர்கள் இன்று வரை... அந்த நிகழ்வை சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள். இதுபோல் இருமுறை என்னோடு கலந்து கொண்டுள்ளார்கள்.

நாம் எழுத்தாளர் என்றால் அவசியம் இதுபோல குழுமத்தில் இணைய வேண்டும். அப்பொழுதுதான் நம்மை பட்டை தீட்டிக்கொள்ள முடியும்.

நம்மால் ஒரு சில பத்திரிக்கை மட்டும் தான் விலை கொடுத்து வாங்க முடியும். இதுபோல குழுமத்தில் இணைந்தால் பத்திரிக்கை பொக்கிஷம் கிடைக்கும். அது மட்டும் அல்ல... போட்டி-க்கான அறிவிப்பும் கிடைக்கும்.

நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள். முத்து ஆனந்த், கடல் நாகராஜன், வேலூர் ராம்குமார்.. போன்ற இனிய நண்பர்கள் கிடைத்தார்கள்.

பத்திரிக்கையில் மட்டும்.. எழுதி வந்த என்னை பேஸ்புக் இணைய பக்கத்திலும் எழுத தூண்டியவர் வேலூர் ராம் குமார்.. அவர் மூலமாக இருபதுக்கும் மேல் விருதும் 1000-த்திற்கும் மேல் சான்றிதழ் பெற்றுள்ளேன். இந்த பெருமை தமிழக எழுத்தாளர் குழுமத்தையே சாரும்.

மேலும் பல எழுத்தாளர் குழுமத்தில் இணைந்து பயணம் செய்கிறேன்.

தங்களுடைய இன்று ஈ இதழ் படிக்க இந்த குழுதான் உதவியது. மேலும் தங்களுடைய சிறப்பாசிரியர் பக்கத்தை தயாரிக்கவும் உதவியது.

எங்களை வழி நடத்தி செல்லும் வைகை ஆறுமுகம்&பாண்டியன் அவர்களுக்கு மிகுந்த நன்றி உடையவனாக இருக்க ஆசைப்படுகிறேன்.


திருச்சிற்றம்பலம் சுரேஷ்


என் படைப்புகள்...
சான்றிதழ்கள்...


இன்று மின்னிதழ்






























என் படைப்புகள்...
சான்றிதழ்கள்...


இன்று மின்னிதழ்

































என் படைப்புகள்...
சான்றிதழ்கள்...


இன்று மின்னிதழ்










































அடுத்த இதழ் மே 16– 31
ஹை... கூ... சிறப்பிதழ்

ஹைகூ...



திருச்சிற்றம்பலம் சுரேஷ்

அவசர உலகில்
அவசர பயணம்
கையேந்தி பவன்
...
உழைக்கும் தொழிலாளி
நம் வீட்டு முதலாளி
அப்பா
...
பிள்ளை படிப்புக்கு
பலி கடா ஆனது
வீடு
...
பணம் இல்லாததால்
ஊர் அமைதியாக உறங்கியது
மது பிரியர்
..

மனிதன் சாப்பிட
காக்கா குளியல் குளித்தது
வாழை இலை
....

தையலர்கள் தவிப்பு
கிழிந்ததை தைக்க முடியாமல்
ஓசோன் போர்வை

....
அடங்கி போனது
ஆட்டமும் பாட்டமும்
திருமணம்
....
பார்க்கும் பொழுதெல்லாம்
கடவுள் மேல் கோபம்
புகைப்படத்தில் அப்பா
....
சாப்பாடு
லாரியில் இறங்கியது.
வைக்கோல்
...
ஆரோக்கியம்மாக இருக்க
நிதி உதவி தாருங்கள்.
கோயில் உண்டியல்.
...
வாங்குவது ஒரு கடை
வைப்பதோ பல கடை.
நகை.

ஒரு கதவுக்கு
பல பூட்டுக்கள்
அடகு கடை
..

மக்களை தேடி
அரசாங்கம் ஓடி வந்தது
சாலை மறியல்
...
மிகச்சிறந்த கடவுள்
மிகப்பெரிய உலகில்
மாதா & பிதா

...
கடன்
மகளிரை வளர்த்தது
மகளிர் குழு
...

அதிகம் செலவு செய்து
விழாவை கொண்டாடி
மகிழ்ந்தனர்
சிக்கன விழா
..
படித்தவர்களும்
கைநாட்டு வைத்தார்கள்
ரேஷன் கடை

படித்ததில் பிடித்தது

ஏதாவது வரம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறோம். கடவுளிடம் வாழ்வு என்பதே வரம் என்பதை எப்போது தெரிந்துக் கொள்கிறோம்.

சந்தர்ப்பமும் சூழ்நிலையும் கூட நட்பும் ஒருவனை கெடுத்து விடும்.

காதலும் கண்ணியத்திற்கும் இடைப்பட்ட அந்த குறுகிய இடைவெளியில் தொலைந்து போனது இராவணனின் காதலன் போல் வாழ்வோம்.

கண்ட இடத்தில் கொட்டக்கூடாது குப்பைகள் மட்டுமல்ல. நம் வீட்டு பிரச்சினைகளையும் தான்.

நத்தையும் ஆமையும் பார்த்து கற்றுக் கொள்ளுங்கள். பிறக்கும்போது நம் முதுகின் பின் சுமை. ஆனால் நாம் நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

வேண்டாம்னு போகின்ற உறவுகளை இடைஞ்சல் செய்யாதீர்கள். பிரிவில் உங்கள் நினைவுகள் உறவாடும். உணர்ந்தால் தேடி வரட்டும். வெறுத்தால் விலகி செல்லட்டும்.

தகுதி இல்லாத இடத்தில் அன்பை செலுத்தி விட்டு ஏமாந்து விட்டேன் என்று சொல்லாதே.. தப்பித்து விட்டேன் என்று நினைத்துக்கொள்.

நேற்று, இன்று காதலித்து நாளை காணாமல் போவதாக இருந்தால் சொல்லிவிடு அன்பே நான் உண்மையில் காணாமலே போய்விடுகிறேன்.

தேடி தேடி கிடைத்த என் புத்திகம் நீ தெரியாமல் கூட தொலைக்க விருப்பமில்லை எனக்கு. நம்மை தவறாக நினைத்து விட்டார்களோ என புலம்பாமல் நம்மை இவ்வளவுதான் புரிந்து கொள்ள வைத்துள்ளார்கள் என விலகி விடுவதை சிறப்பான பதில்.

அன்பாக பழகுவதை மறந்து அளவாக பழகுவதற்கு கற்றுத் தருகிறது சில அனுபவங்கள்.

எந்த உறவையும் எந்த ஒரு தேவையும் இல்லை என்று விலகிப் போக காரணம் விருப்பம் அல்ல இன்னொரு முறை துரோகத்தையும் அவமானத்தை பார்த்து தன்மானத்தை இழந்து விடக்கூடாது என்பதற்காக.

நேற்று இதன் பெயர் இலை
இன்று சிலருக்கு சருகு.

இறைவன் எழுதாமல் எதுவும் நடக்காது. எதுவும் இறைவனை நாடாமல் எதுவும் கிடைக்காது முயற்சி செய்வதே நம் பணி.

எல்லாம் மௌனங்களும் திமிர் அல்ல... சில மவுனங்கள் சொல்ல முடியாத காயங்கள்.

படிப்பு கற்று தருவதை விட சில நடிப்பு சிறப்பாக கற்றுத் தரும் வாழ்க்கையை.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்



இன்று மின்னிதழ்



சிறப்பு தினம்

ஜனவரி 15 குடியரசு தினம்

பிப்ரவரி.. 14அறிவியல் தினம்

மார்ச் 03 பாதுகாப்பு தினம்
மார்ச் 8 மகளிர் தினம்

மார்ச் 20 உலக ஊனமுற்றோர் தினம்
மார்ச் 21 காடுகள் தினம்
ஏப்ரல் 1 முட்டாள் தினம்
ஏப்ரல் 4 உலகசுகாதார தினம்
ஏப்ரல் 23 உலக புத்தக தினம்
ஏப்ரல் 30 குழந்தை தொழிலாளர் தினம்
மே 1 தொழிலாளர் தினம்
மே05 வணிகர் தினம்
மே12 உலக செவிலியர் தினம்
மே 24 புத்தக தினம்
மே 31 புகை எதிர்ப்பு தினம்
ஜூன் 17 தந்தையர் தினம்
ஜுன்27நீரழிவு தினம்
ஜூலை 11 மக்கள் தொகை தினம்
ஜூலை 26 கார்கில் போர் தினம்
ஆகஸ்டு 26 இந்திய சுதந்திர தினம்
செப்டம்பர் 18 அறிஞர் தினம்
அக்டோபர் 9 உலக அஞ்சல் தினம்

அக்டோபர் 20 தேசிய தினம்
நவம்பர் 2 1 தொலைக்காட்சி தினம்

பிறப்பு இறப்பு தினம்

வீரபாண்டி கட்டபொம்மன் {3.1.1760_10.6.1801}
ஜெயலலிதா {24.2.1948....5.12.2016
கொடிகாத்த குமரன்{4.10.1904__11.1.1932}
எம் ஜி ராமச்சந்திரன் {17.1.1917__24.12.1987}
கவிக்குள் சரோஜினிநாயுடு {13.1.1879__10.3.1949}
மணிஅம்மையார் {10.3.1917....16.3.1978}
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் {13.4.1930...8.10.1959}
அம்பேத்கார் {14.4.1891__6.12.1956}
பாரதிதாசன்{29.4.1891__24.4.1964}
கருணாநிதி {3.6.1924..7.8.2018
கண்ணதாசன்{24.6.1927__17.10.1981}
பாலகங்கா திலகர் {23.7.1856....1.8.1920}
மருதுபாண்டி {4.8.1783__24.10.1802}
ரைட்டர் சாவி {10.8.1783__24.10.1801}
ஜி கே மூப்பனார் {19.8.1930__30.8.2001}
ராஜீவ் காந்தி{20.8.1944__21.5.1991}
வா உ சி {5.9.1872__18.11.1936}
பெரியார்{17.9.1879__24.12.1973}
தினத்தந்தி ஆதித்தனார் {27.9.1905__24.5.1981}
காந்தியடிகள்{2.10.1869...30.1.1948}
ராமலிங்க பிள்ளை {19.10.1888__24.8.1972}
ராமானுஜர் {27.10.1887__26.4.1920}
வல்லபாய் பட்டேல் {31.10.1875___15.12.1950}
சர் சி வி ராமன் {7.11.1888__21.11.1970}
நேரு{14.11.1889__27.5.1964}
இந்திரா காந்தி {19.11.1917__31.10.1984}
ராஜாஜி{9.12.1878___25.12.1972}

மின்னிதழ்

நம்மை நேசிக்கும்
நூறு பேரை
நேசிக்கத்
துவங்கினாலே...


நம்மை வெறுக்கும்
நான்கு பேரைப்பற்ற
யோசிக்க நேரமிருக்காது.

மின்னிதழ்

குடும்பம் சமூக
அமைப்பின்
ஒழுங்காகவும்
நிபந்தனையற்ற
அன்பு, ஆதரவு
மற்றும் பாதுகாப்பு
வழங்கும் இடமாகவும்
விளங்குகிறது.



என் கேள்வி???
என் பதில்....



பெண்களுக்கு அணிகள் தேவையா?

அவசியம் தேவை. கழுத்திற்கு ஆடம்பர தேவையில்லை. ஒன்றோ இரண்டே போதும். பெரும்பாலான திருமணம் ஆகாத பெண்கள் அணிகளின் அணிவதே இல்லை.. அது தவறு. ஒன்றாவது அணிய வேண்டும். திருவிழாக்கு செல்லும் பொழுது ஒரு நகை போதும். நிறைய அனிந்து சென்று.பறிக்கொடுத்து விட்டு அழுவது சிறப்பல்ல.

எதற்கெடுத்தாலும்.. திருமணம் ஆன பெண்.. அம்மா வீட்டுக்கு செல்வது சிறப்பா?

கணவனை மனைவியும். மனைவியை கணவனும் புரிந்து வாழ்ந்தால். வாழ்க்கை சிறப்பாக அமையும். சின்ன சின்ன சண்டைக் எல்லாம் திருமண ஆன பெண்கள் அம்மா வீட்டுக்கு செல்வது திருமண பந்தத்திற்கு இடைவெளி உண்டாகும். அப்படியே வந்த மகளை சமாதப்படுத்தி கணவருடன் சேர்த்து வாழ உடனடியாக முயற்சி செய்ய வேண்டும். விவாகரத்து வரை அழைத்து செல்லக் கூடாது

ஜாதி எப்படி வாழ்க்கைக்கு தேவை?

ஜாதி..படிப்பு சான்றிதழ்க்கு மட்டும் இருந்தால் போதும். தேவையில்லாமல் காதலில் விழுந்து வாழ்க்கையை சிதைக்க வேண்டாம்.

எழுதத் துடிக்கும் எழுத்தாளருக்கு தாங்கள் கூறும்அறிவுரை என்ன?

மற்றவர்கள் படைப்பை படியுங்கள்.அதில் கற்றதை உங்கள் தனித்திறமையால் எழுதமுயற்சி செய்யுங்கள். தயவு செய்து மற்றவர் படைப்பை பத்திரிகைக்கு அனுப்பாதீர்கள். பணத்துக்காக மட்டும் எழதாதீர்கள். அனைத்து இதற்கும் எழுதுங்கள். பெயர் முக்கியம்.

மரணம்..?

சின்ன சின்ன சண்டைக்கெல்லாம் திருமணமான மனிதர்கள் தற்கொலை செய்வது அதிகரித்து வருவது.. மனதிற்கு மிக வேதனை தருகிறது. கணவன் இல்லாமல் மனைவியும், மனைவி இல்லாமல் கணவனும் வாழ்வது.. இவ்வுலகில் மிக கஷ்டம். பேசி தீர்க்க பல வழிகள் உள்ளது.வேண்டாம் தற்கொலையில் வாழ்க்கை.

(சிறுகதை)

என் உடலை ..

அம்மா...! நான் இல்லாத நேரத்தில் டாக்டர் யாராவது வந்தார்களா?

ஆமா தம்பி.

என்னம்மா கூறினார்கள்?

நான் மரணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறேன். வீட்டுக்கு போயிட்டு ஆசைப்பட்டது,பார்க்க வேண்டிய உறவுகளை எல்லாம் பார்த்து சந்தோஷமாக மரணம் அடைய சொன்னார்கள்.

வாம்மா...வீட்டுக்கு போகலாம். அங்கு என்னையும்... உன்னையும் தவிர யார் இருக்கிறார்கள்!?.

என் கணவர் மரணத்துக்கு என் சொந்தம்.. செலவு செய்து விட்டு. அடிக்கடி செலவை சொல்லிக் காட்டுகிறார்கள்.இப்ப நானும் இல்லை. உன்னிடம் பணம்.. இருந்தாலும் அதை எடுத்துக் கட்டி செய்ய உனக்கு தெம்பு இல்லை. உறவுகளும் உனக்கு ஒத்துழைப்பு தர மாட்டார்கள்.

நிறைய முறை கேள்விப்பட்டிருக்கிறேன். மனித உடலை மருத்துவ பயன்பாட்டுக்கு பிறர் தந்துள்ளதை.

நான் இன்னும் சில நாட்கள்.. இங்கே சந்தோஷமாக இருந்து இறந்து விடுகிறேன். என் உடலை மருத்துவ ஆய்வுக்கு தானமாக தந்துவிடு. என் உடம்பை மண் தின்னுவதை விட படிப்பு–க்கு மிகவும் உதவியாக இருக்கும். அந்த சந்தோஷம் எனக்கு போதும்டா.

இதனால் உனக்கு ஈம சடங்கு பணம்... மட்டுமல்ல உழைப்பு மிச்சம் ஆகும். நான் இல்லாத நேரத்தில் உறவிடமும் நீ கெஞ்ச தேவையில்லை. நாளை வரும் டாக்டரிடம் இதைப்பற்றி கூறி சம்மதம் பெறுகிறேன். மூலை சாவு அடைந்த மனிதர்களின் உறுப்புகளை தானமாக தருவது போல " என் உடலையும் நான் தருகிறேன் உனக்கு சம்மதமா?

அம்மாவின் பதிலை. கேட்டு. வெளியே... சொல்ல முடியாமல் மனதுக்குள் அழுதான்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்
9092142678







தேவைகள்

தேவையென்ற பள்ளத்தை நிரப்ப
வருமானமென்ற மண்
எல்லோருக்கும் எப்போதும் அவசியம்.
தேவைக்கான தேடலில்
எப்போதும் இருந்திட வேண்டும்.
நியாயமும் தர்மமும்,
தேவைகளை ஈடுசெய்ய
பேராசைப்பட்டுஅறுத்துவிடக்கூடாது.
பொன்முட்டையிடும் வாத்தை
தேவைகள் குறையாது
மலைபோல் உயர உயர
யாருக்கும் பயனற்று
அடங்கிவிடும்
அஸ்தமனமாகிவிடும்
அனைத்தும்




ஸ்ரீநிவாஸ் பிரபு

மனிதம்

மரங்கொத்திப் பறவையாய்
மனம் கொத்தி தேடிப்பார்க்கிறேன்
காணவில்லையே மனிதம்!

சிட்டுக்குருவியைப் போல
தொலைத்து விட்ட ஒன்று
எங்கு தேடியும் காணோம்!



கோவைக்கவி புவனா
கோயம்புத்தூர்

வருங்காலம் !



காக்கை,
குருவி,
ஆறு,
குளம்,
ஓடை,
கம்மாய்,
கிணறு,
வயல்,
வரப்பு...
என இன்னும் பலதும்
தேடி பார்க்க வேண்டியிருக்கும்
இணைய தளங்களில்...
வ(ள)ரும்
தலைமுறையினர் !



எம்.பி.தினேஷ்
கோவை – 25

கதம்ப மாலை !




வெண்ணிற முல்லைப்பூ
மயக்கும் மஞ்சள் சாமந்தி
கண்ணைக் கவரும் கனகாம்பரம்
உளம் கவரும் உன்னத ஊதாப்பூ
பார்வையை ஈர்க்கும் பாரிஜாதம்
பொன்னென மின்னும் தங்க அரளி
அடர் சிவப்பில் சிரிக்கும் செம்பருத்தி
இளஞ்சிவப்பில் மிளிரும் ரோசாப்பூ
மனதிற்கினிய மல்லிகைப்பூ
மணம் கமழும் செண்பகப்பூ
பசுமை நிறைந்த மரிக்கொழுந்து
வாசமிகு மலர்கள்
அனைத்தும் தேர்ந்து தொடுத்த மாலையாய்
மங்கையின் கரத்தில்
மணவாளன் வருகைக்கு காத்திருக்கிறதோ !

பி. ஆர்.கிரிஜா,
சென்னை









படத்தை தொடுங்கள்... பாட்டை கேளுங்கள்...

1..பாடல்: அம்மா என்றழைக்காத உயிர் – படம் : மன்னன்



"பசும் தங்கம் புது வெள்ளி,
மாணிக்கம் மணிவைரம்
அவை யாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா
விலை மீது விலை வைத்துக்
கேட்டாலும் கொடுத்தாலும்
கடை தன்னில் தாயன்பு கிடைக்காதம்மா"

இந்த உலகில் விலை சொல்ல முடியாத ஒரு விஷயம் உண்டு என்றால், அது தாயின் அன்பு மட்டும் தான். இப்போது இருக்கும் குழந்தைகள் எல்லாம் தாயை அனாதை விடுதியில் விட்டு செல்கிறார்கள். தாய் இல்லாதவர்களை கேட்டு பாருங்கள் தாயின் அருமை புரியும் அம்மாவின் அன்பை பற்றி கூறும் இவ் வரிகள் எனக்கு மிகவும் பிடித்தமானவை.

2.பாடல்: முத்தமிழ் கவியே வருக – படம்: தர்மத்தின் தலைவன்



"காதல் தேவன் மார்பில்
ஆடும் பூமாலை நான்
காவல் கொண்ட மன்னன்
நெஞ்சில் நான் ஆடுவேன்"

காதல் என்பதே நம்பிக்கைதான். அரவணைப்பு என்பது ஒரு ஆணிடம் இருந்து பெண்ணுக்கு பாதுகாப்பான ஒரு உணர்வுதான். அவன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன்னை விட்டு விலக மாட்டான், தன்னை எப்பொழுதும் பாதுகாப்பான் என்று நம்பி தான் ஒரு பெண் காதலில் விழுகிறாள். காதல் என்பது ஆண் மீது கொண்ட நம்பிக்கையும் அவன் தன்னுடைய பாதுகாவலன் என்ற எண்ணமும் தான். அதை மிகவும் ஆழமாக சொல்லும் இந்த வரிகள் எனக்கு மிகவும் பிடித்த வரிகள்

3.பாடல்: உள்ளத்தில் நல்ல உள்ளம்–படம்: கர்ணன்



"செஞ்சோற்று கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து
வஞ்சத்தில் வீழ்ந்தாயடா – கர்ணா
வஞ்சகன் கண்ணனடா
வஞ்சகன் கண்ணனடா"

தன்னைச் சுற்றி இருந்த யாவரும் தன்னை அவமானப்படுத்திய பொழுதும் கூட, தன் மானத்தை காப்பாற்றிய தன் நண்பனுக்காக சரி தவறு என்றெல்லாம் அறியாமல் தன் நண்பனுக்காக மட்டுமே வாழ்ந்தவன் கர்ணன். ஆனால் அத்தனைக்கும் காரணமானவன், வஞ்சம் தீர்த்துக் கொண்டவன் கண்ணன். இதை மிகவும் அருமையாக சொல்லி இருப்பார்கள் இந்த வரிகளில்.
நட்பின் ஆகச்சிறந்த அடையாளம் கர்ணன்.

4.பாடல்: பரமசிவன் கழுத்தில் இருந்து படம்: சூரியகாந்தி



"உயர்ந்த இடத்தில் இருக்கும் போது
உலகம் உன்னை மதிக்கும் உன்
நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும்கூட மிதிக்கும்!"

நம்மிடம் என்ன பதவி உள்ளது, எவ்வளவு பணம் இருக்கின்றது, நம்மளுடைய பொருளாதார நிலை என்ன?... இவற்றையெல்லாம் பார்த்து தான் இந்த உலகம் நம்மை மதிக்கும். நாம் நல்ல மனம் படைத்திருக்கிறோமா என்பதை இவ்வுலகம் கொள்ளாது. நம்மை ஆகா ஓகோ என்று பேசியவர்கள் எல்லாம் நம் நிலைமை கொஞ்சம் தாழ்ந்து விட்டாலும் தன் காலடியில் போட்டு மிதித்துச் சென்று விடுவார்கள். இது அனைவருக்கும் பொருத்தமான ஒரு விஷயம்தான். ஆனால்,கணவன் மனைவிக்கு இடையே இருக்கக்கூடிய ஈகோவை பற்றி இதில் எடுத்துரைத்திருப்பதும் சிறப்பு
.

5.பாடல் : அம்மம்மா தம்பி என்று நம்பி படம்: ராஜபார்ட் ரங்கதுரை



"கையில் வைத்து காத்திருந்தால்
காலடியில் காத்திருக்கும்
நன்றி மிக்க நாய்கள் உள்ள நாடு
இதில் சொந்தமின்றி பந்தமின்றி
வந்த வழி நினைவுமின்றி
பிள்ளைகளும் பிறந்திருக்கும் வீடு"

இவ்வுலகில் நாம் எவ்வளவுதான் நல்லது செய்தாலும் கூட அதை நினைத்து பார்த்து நன்றியுடன் இருப்பவர்கள் மிகவும் சிலரே.. ஒருமுறை உணவிட்டாலே போதும் நாய்கள் நம்மை எங்கு கண்டாலும் நன்றியுடன் சுற்றி வரும்.ஆனால், அப்படிப்பட்ட நாய்கள் பிறந்த இந்த உலகத்தில் தான் நன்றி கெட்ட பிள்ளைகளும் பிறந்திருக்கிறார்கள் என்ற வரிகள் மிகவும் பிடித்தமானது.



கவிஞர் சசிகலா திருமால்
கீழப்பழுவூர்
அரியலூர் மாவட்டம்.








டாக்டர் மூணு நாளா ஒரே கேஸ் பிராப்ளமா இருக்கு

கவலைப்படாதீங்க இந்தியா முழுக்க இதே பிரச்சனைதான்....

சாமி சாட்டையால்அடித்தும் தீச்சட்டி எடுத்தும் எனக்கு சீட்டு கிடைக்கவில்லையே....

உன்னிடம் உள்ள வீடியோ ஆடியோ ஆதாரங்களை வெளியிடு. உனக்கும் உன் கூட இருப்பவர்களுக்கும் சீட் கிடைக்கும்


நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி



ஒருவர் : நம்ம தலைவர் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறாரே! எதற்கு?
அடுத்தவர் : தேர்தல் பிரச்சாரத்தின் போது அவருக்கு தொண்டர்கள் போர்த்திய துண்டுகளில் ஒன்று குறையுதாம்!


தாத்தா : நாங்க ஒன்றாம் வகுப்பு சேரும் போதே நீட் தேர்வை விட கடிமான தேர்வை சந்தித்து விட்டோம் தெரியுமா?
பேரன் : அது என்ன தாத்தா?
தாத்தா : வலது கையை தலைக்கு மேலாக கொண்டு வந்து இடது காதை தொட வேண்டும்.

நாஞ்சில்
சு. நாகராஜன்
பறக்கை.



டயலாக்

மேடவாக்கம் செல்லும் பேருந்தில் ஒரு பெண்ணும், இளைஞனும்:
"தம்பி, உள்ளதான் கடல் மாதிரி இடம் இருக்கே. நகந்து போயேன் டா "
"எனக்கு 'கடலுக்குள்ளே' போகறதுன்னா பயம் அக்கா"



டீ. என். பாலகிருஷ்ணன்
மடிப்பாக்கம்



மெகா சீரியலுக்கு டயலாக் எழுதறவர சினிமாவுக்கு எழுதச் சொன்னது தப்பாப் போச்சி

ஏன் சார்?

மூனு மணிநேரப் படத்துக்கு மூவாயிரம் பக்க டயலாக் எழுதியிருக்காரே ....

நீங்க டயலாக் எழுதின ஒரு படத்தோட பேர் சொல்லுங்க..

பேர் சொல்ற மாதிரி ஒரு படம் கூட வெளிவரல சார்.

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்,
✆ -9600886441.



தினசரி ஐந்து மணி நேரம் தூங்குதல் அவசியம்...

சார் ஸ்கூலிலா வீட்டிலா சார்?

இரவு ஏழு மணிக்குப் பிறகு நான் பக்கத்து வீட்டுல போய் கதவைச் சாத்திக்கிறேன்டி.... என்னடி சொல்ற ?

ஆமாண்டி... என் கணவர் குடிச்சிட்டு வந்து பக்கத்து வீட்டுக் க தவைத்தானேடி தட்டுகிறார்?

எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி





இன்று மின்னிதழ்



இன்று காலை சென்னை மடிப்பாக்கம் lake view ரோட்டில் பார்த்த இந்த அக்காவின் மூலிகை சூப், மூலிகை ஜீஸ், கஞ்சி வகைகளுக்காக பலரும் தேடி வருகின்றனர். அதிகாலை 2 மணிக்கு தன் வேலையை ஆரம்பித்து அதிகாலை 5;30 மணிக்கு இந்த இடத்துக்கு வந்துவிடுவாராம். இந்த ஆரோக்கிய உணவுகளை கடந்த 2 வருடங்களாக விற்பனை செய்து வருகிறாராம். அது மட்டுமில்லாமல் தினம் ஒரு கீரை பொரியலையும் விற்பனை செய்கின்றார்.





தாய்ப் பாசம்





முத்து ஆனந்த்
வேலூர் 7010482479

என்னுடைய ஆசைகளில் முதன்மையானது மற்றவர்களுக்கு உதவி செய்வது! இந்த உதவி பண உதவி, இட உதவி, பொருள் உதவி, நகை உதவி என நிறைய பேர் மிகவும் வித்தியாசமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆனால், சின்னச் சின்ன உதவிகள் கூட மனிதாபிமானம் மிக்கது தான்! தண்ணீர் வாங்கிக் கொடுப்பது, சிற்றுண்டி வாங்கிக் கொடுப்பது, சாலையைக் கடக்க உதவி செய்வது, அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களை வாங்கிக் கொடுப்பது இப்படி நான் எப்பொழுதும் செய்து கொண்டேயிருக்கிறேன்! இதுவே, என் ஆசைகளில் ஒன்று. இதுவே முதன்மையானது. இதில் நான் கொடுக்கும் ரத்ததானமும், ஏற்கெனவே எழுதி வைத்திருந்த உடல் தானமும் இதில் அடங்கும்!

பத்திரிகைகள் குறைந்து போனாலும் எப்பொழுதும் எழுதுவதையும் படிப்பையும் நிறுத்தி விடக் கூடாது என்பது இன்னோர் ஆசை!

எப்பொழுதும் தோழர், தோழிகளிடம் அன்பாகவும், நட்பாகவும் நடந்து கொள்ளவும் வேண்டும் என்பது எனது ஆசை!


மனநிலை சரியில்லாதவர்களுக்கு நான் நிறைய கவுன்சிலிங் செய்திருக்கிறேன்! அதைத் தொடர்ந்து செய்யவும் ஆசைப்படுகிறேன்!

நேரம் கிடைக்காததால் ஒரு பக்கச் சிறுகதைகளும் மற்றும் சிறுகதைகளும் எழுதியே நீண்ட நாட்களாகிறது! இனி, தமிழ்ப்புத்தாண்டிலிருந்து கிடைக்கும் நேரங்களில் கதைகள் எழுத வேண்டும் என்று மிகவும் ஆசையுடனிருக்கிறேன்!

இது வரை தொடரும் இதெல்லாம் இனியும் தொடர வேண்டும் என்று விரும்புகிறேன்!







குளத்தின்
படித்துறையிலிருந்து
இடுப்பில் குடத்தோடு
வரும் தறுவாயில் எல்லாம்
புன்னகைப் பூவையும்....
ஊசிப் பார்வையும் வீசி விட்டு
செல்லும் பூவையின்
இடுப்பில் குந்திக்
கொண்டிருக்கிறது
"குழந்தை"!



--கே. அசோகன்

தேர்தல்

தேர்தல் ஒருவித ஜுரம்
மருந்து மாத்திரைக்கு
அடங்காத காய்ச்சல்!

தேர்தல் ஒரு திருவிழா.
கொண்டாடுவார்கள்
ஆடி காட்டுகிறார்கள்.
அல்லாதவர்கள்
மாண்டு மடிகிறார்கள்!

தேர்தல் ஒரு பாம்பு கடி.
உள்ளேறிய விஷத்தை
எடுத்துவிட ஐந்து ஆண்டுகள்!

மீண்டும் ஒரு தேர்தல்.
புது விஷம் ஏற
ஜனநாயகம் கைக் கொடுக்கிறது!

தேர்தல் ஒரு வரம்
கருப்புப் பணம் வெள்ளையாக்கிரவனுக்கு.

தேர்தல் ஒரு கைவிலங்கு
நேர்மையாக இருக்க விரும்புவனுக்கு.

விஜயலக்ஷ்மி கண்ணன்





இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in



Emergency Helpline No.	
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
108	Medical Helpline
131	Indian Railway Enquiry
139	Railway Enquiry
1031	Anti Corruption Helpline
1072	Train Accident
1090	Anti Terror Helpline
1910	Blood Bank Information
1947	Aadhar card-UIDAI
1071	Air Accident
1906	LPG Emergency Helpline
1919	Eye Donation Bank
1551	Kisan Call Center
1096	Natural Disaster Control
1098	Child Abuse Hotline

பல்சுவை

இன்று மின்னிதழ்



இன்று- ஈ இதழை எளிதில் தொடர்புகொள்ள...
Just Click... கீழே உள்ள படங்களைத் தொட்டால்
போதும்... இணைப்பு கிடைத்துவிடும்...

Whaatspp

Join Channel

https://www.facebook.com/inru.i.patippu

www.indhru.in

கலை கோலங்கள்










பா.கலைமகள், விழுப்புரம்










Atossa Academy
Classy writing for classy kids
Atossa Academy

From Fingers to Fast Mental Maths
Abacus
Speed Up Your Calculations
Vedic Maths
Classy Writing for Classy Kids
Cursive Handwriting
Build Your Future with Better English
Basic English Grammar
Online & Offline Classes
@ Velachery - AGS Colony
Offline Classes On : MONDAY - WEDNESDAY - FRIDAY
Timings : @ 6.30 p.m to 7.30 p.m.
Online Classes On : SATURDAY & SUNDAY
Timings : @ 6.00 p.m to 7.00 p.m.
"Special attention is given to every individual Students"
Ms. S. Aswini M.A., B.Ed.,
Call : 99622 01523

அடுத்த இதழ் மே 16– 31 ஹை... கூ... சிறப்பிதழ்







அம்மாவின் துப்பட்டி

எப்போது எழுத துவங்கினேன் என்று கருத்து தெரியாத காலத்தில் என்னுள் உதித்த எழுத்து. வயது முப்பத்தி ஒன்பது ஆகியும் இன்னும் உதிராமல் உதிரமாய் ,உயிராய் இருப்பதையே வரமாய் எண்ணுகிறேன் .சரி ,தவறை கடந்து மனதில் தோன்றியதை வெளிப்படையாய் எழுதுவதும் எழுத்தாளனின் வெற்றி என்றே நினைக்கிறேன். வாழும் காலம் இன்னும் எத்தனை வருடம் என தெரியவில்லை ஆனால் மரிக்கும் கடைசி நொடி வரை தீராத எழுத்தை சலிக்காமல் எழுதி தீர்த்திட வேண்டுமென எண்ணுபவன் .

பொழுதுபோக்காய் எண்ணாமல் ,வாழ்வின் ஒரு பகுதி தானே என அசட்டை செய்யாமல், கல்யாணத்தில் முடிவு பெறுவது அல்ல என்பதை உணர்ந்து வாழ்வின் ஒவ்வொரு நொடி பொழுதையும் சுவாசமாய் காதலை எண்ணுபவர்களை மிகவும் விரும்புபவன் .உங்களை போல அன்புக்காக ஏங்குபவர்களில் நானும் ஒருவன் அதனால் தான் என் கதைகளில் நிறைய காதல் நிறைந்திருக்கும் .

என் கதைகள் தான் உலகத்தின் ஆகச்சிறந்த படைப்பு என பொய்யெல்லாம் சொல்லமாட்டேன் ஏனெனில் உலகத்தின் ஆகச்சிறந்த ஒன்று என்று எதுவுமே இல்லை .படிக்கும் ஒவ்வொரு வாசகனின் பார்வையும் வித்தியாசமானது, விசித்திரமானது, வேறு, வேறானது .

ஒருவருக்கு பிடிப்பது இன்னொருவருக்கு பிடிக்காமல் கூட போகலாம்.எல்லோரையும் திருப்தி படுத்த படைப்பாளன் ஒன்றும் உணவு சமைப்பவர்கள் அல்ல. பரிமாறும் உணவில் கூட எல்லோரையும் திருப்திப்படுத்துவது இயலாத ஒன்று தான்.

மனதில் தோன்றிய, அல்லது உருத்திய ஏதோ ஒன்று தான் இங்கு புனைவாகவோ, அல்லது உண்மையின் பிரதிபலிப்பாகவோ வெளிவருகிறது .

சரி, தவறை கடந்து என்னுடைய படைப்பை வாசகர்களாகிய உங்களிடம் சமர்ப்பித்து விடுவேன். அதன் பின் அந்த படைப்புக்கான அங்கீகாரத்தை வாசகர்களே பார்த்து கொள்வார்கள் என எண்ணுபவன் .

இசுலாமிய மக்களை பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு எண்ணம் இருக்கும். இதுவரை சினிமாவில் காணாத யதார்த்த இசுலாமிய மக்களின் வாழ்வியலை சிறுகதை வாயிலாக உள்ளது உள்ளபடி எழுத்தின் வழியாக காட்டி இருக்கிறேன். இந்த நூலை படித்து முடிக்கும் தருவாயில் இதுவரை தமிழ் சினிமா பார்த்து தீவிரவாதிகளாக இசுலாமிய மக்களை பார்த்து கொண்டிருந்த சிலரது தவறான எண்ணங்கள் மாறலாம். இதுவரை இசுலாமியர்களின் மீது வெறுப்பு கொண்ட ஒருவர் இந்த நூலை படித்து மனம் மாறினால் அதுவே என் எழுத்துக்கான வெற்றி. கேரளா சினிமா போல் இங்கும் எல்லா தரப்பு மக்களின் வாழ்வும் பதிவு செய்ய வேண்டும் என்பதே என் ஆசை. அம்மாவின் துப்பட்டி எல்லா சமூகத்து மக்களும் படிக்க வேண்டிய பேரன்பின் பொக்கிஷம் அது !

வெளியீடு– மௌவல் பதிப்பகம்
வலங்கை மான் நூருதீன் (பதிப்பாளர்)
21 /9 வரதர் தெற்கு மட வீளாகம் தெரு
வலங்கை மான் –612–804
அலைபேசி 91–97877–09687
நூல் ஆசிரியர்
லி .நெளஷாத் கான்

– இன்று குழு










யார் இவர்?
நடிகை
மனோரமா

சினிமா புதிர்...

மலைக்கள்ளன் 1954 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும்

ஆதாரம்



நேற்று இரவு அடித்த புயல் காற்றில் வீட்டின் கூரை பறந்தது. மண்சுவர் மண்ணோடு மண்ணாகியது. சோற்றுப் பானை மழை நீரில் மிதந்து போனதை கண்ணீருடனும் பசியுடனும் எச்சுமி பார்க்க; "அம்மா!சோறு." என்றாள் தனம். எச்சமியின் இடுப்பில் இருந்த மகள். இருந்த ஓரிரு தட்டு முட்டு சாமான்களும் போன இடம் தெரியவில்லை. மகன் செந்தில் அம்மாவின் விரல் பிடித்து வெறுமனே நின்றான்.
பிள்ளைகளோடு மலையடிவாரத்திற்கு வந்தாயிற்று. வீரன் வாலைச் சுருட்டிக் கொண்டு பசி மயக்கத்தில் படுத்திருந்த வீரனை, முனிசிபாலிடி வண்டி தூக்கிப் போட்டுக் கொண்டு போனதைப் பார்த்த மாடசாமி, அதற்குக் கூட போக்கிடம் ஒன்று உள்ளதேயென்று என்று பெருமூச்செறிந்தான். இனி எப்படி பிழைப்போம்;" என்று, எச்சுமியிடம் கேட்க.....எச்சுமி தன் சேலை மடிப்பிலிருந்து ரேஷன் கார்டையும் ஆதார் கார்டையும் வாக்காளர் அட்டையையும் காண்பித்தாள். மாடசாமிக்கு அழுகையும் ஆத்திரமும், சிரிப்புமாக முகம் கோணியது.

சசிகலா விஸ்வநாதன்



தேர்தல் நேரம். நிறைய நண்பர்கள் அந்த கட்சி வரும். இந்த கட்சி வரும். அவர் வருவார். இவர் வருவார் என்று பல்வேறு வித ஆருடங்களும் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். என்னையும் சில நண்பர்கள் என்ன பெருசு எது வரும்? என்றார்கள். யாரு வேணா வரட்டும் என்றேன். இந்த குசும்பு தான வேண்டாம்குறேன். எதாச்சும் ஒரு கட்சி சொல்லுங்க என்றார்கள்.
எந்த கட்சியை சொல்லி என்ன ஆகப்போகிறது. அவர் அவர் ஆளப்போகிறார்கள். ஒரு அரசுக்கும் வேறு அரசுக்கும் சில விசயங்களில் தான் மாற்றம் இருக்கும். மற்றபடி நீ வேலைக்கு போனால் தான் சோறு... நீ உழைத்தால் தான் ஊதியம்... பிறகு எந்த கட்சி வந்தால் என்ன?
அதோடு முன்னரே தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்? யார் வேண்டுமானாலும் வரட்டும்....



ம்.க்கும்... இது ஒரு பெரிய செய்தியா? என்றார்கள். ஆம் பெரிய செய்தி தான். அலட்டிக்கொள்ளத்தேவை இல்லாத விசயங்களில் ஒதுங்கி இருப்பது தான் அழகு. அதை தலையில் சுமந்துகொண்டு, பிரச்சனையாக்கி, நண்பர்களுக்குள் விரோதத்தை சம்பாதித்துக்கொண்டு.... நமது சொந்த கருத்துக் கணிப்புக்களையெல்லாம் மனதிற்குள் வைத்துக்கொண்டால் இந்த குழப்பங்களுக்கே வேலை இல்லை... யார் ஆட்சி வந்தாலும் மக்கள் தீர்ப்பே.... மகேசன் தீர்ப்பு....

இன்முகத்தான்



கதைகளில், கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல. படைப்புகள் கொடுத்த வலைதளங்களுக்கு நன்றி.
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் : 7094053241

